// தேர்வுகள் // // தனி கவனம் //

வேலூார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண். 333 / பி 4 /2021 நாள் : 27.01.2021

பொருள் : தேர்வுகள் –வேலூார் மாவட்டம் –2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் – பள்ளி மாணவர்கள் பெயர்ப் பட்டியல் EMIS விவரங்களின் அடிப்படையில் தயாரித்தல் – மாணவர்கள் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் குறித்து அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : 1. அரசாணை (நிலை) எண்.58, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (D.M– IV) துறை, நாள்.22.01.2021.
2. சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடித 025639/எப் 1/2020 நாள் : 27.01.2021

*****

பார்வை 1ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 2ல் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதத்திற்கிணங்க 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிப்பதற்கு, EMIS–ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள மாணவர்களின் தகவல்களுள், கீழ்க்காணும் தகவல்கள் பயன்படுத்தப்பட உள்ளன.

1. மாணவரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. பிறந்த தேதி
3. புகைப்படம்
4. பாலினம்
5. வகைப்பாடு (சாதி அடிப்படையிலான வகைப்பாடு)
6. மதம்
7. மாணவரின் பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
8. மாற்றுத் திறனாளி வகை
9. கைபேசி எண்
10. பாடத் தொகுப்பு – Group code (+1 மாணவர்களுக்கு மட்டும்)
11. பயிற்று மொழி (Medium of instruction)
12. மாணாக்கரின் வீட்டு முகவரி

பள்ளி மாணவர்களின் மேற்குறிப்பிட்ட தகவல்களைப் பயன்படுத்தியே, 2020–2021–ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான பள்ளி மாணவர்களின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட உள்ளதால், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும், இன்று (27.01.2021) முதல் 06.02.2021 வரையிலான நாட்களில் EMIS –ல் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password – ஐ பயன்படுத்தி, EMIS Portal–ல் சென்று தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது மேற்குறிப்பிட்ட விவரங்கள் சரியாக உள்ளதா என்பதனையும், மாணவரின் பெயர், பிறந்ததேதி, புகைப்படம் மற்றும் பாடத்தொகுப்பு ஆகிய விவரங்கள் பின்வருமாறு உள்ளதா என்பதனையும் சரிபார்த்து, திருத்தங்கள் இருப்பின் உடன் திருத்தத்தினை மேற்கொள்ளவேண்டும்.

## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு

1. **மாணவரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)**

மாணவரது பெயர் பிறப்புச் சான்றிதழில் உள்ளவாறே இருத்தல் வேண்டும். பெயர் முதலிலும், அதனைத் தொடர்ந்து தலைப்பெழுத்தும் இடம்பெறும் வகையில் மாணவரது பெயர் இருக்க வேண்டும். பெயருக்கும் தலைப்பெழுத்துக்கும் இடையில் (Between name and initial) ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும் (புள்ளி வைத்தல் கூடாது). இரு தலைப்பெழுத்துக்கள் இருப்பின் இரு தலைப்பெழுத்துக்களுக்குமிடையே ஒரு இலக்க இடைவெளி மட்டுமே இருத்தல் வேண்டும். மாணவரது பெயரை தமிழில் பதிவேற்றம் செய்யும் போது தலைப்பெழுத்தும் தமிழில் இருக்க வேண்டும். உதாரணமாக, மாணவரது தந்தையின் பெயர் கண்ணன் எனில், தலைப்பெழுத்து த என இருக்க வேண்டும்.

அரசிதழில் பெயர் மாற்றம் செய்தவர்களுக்கு மட்டுமே அரசிதழின் நகலைப் பெற்று அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

2. **பிறந்த தேதி**

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினைப் பொறுத்தவரை, மாணவரின் பிறந்த தேதியினை பிறப்புச் சான்றிதழுடன் ஒப்பிட்டு சரிபார்த்த பின்னரே பதிய வேண்டும். மாணவர்கள் 01/03/2021 அன்று கண்டிப்பாக 14 வயது நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். 01/03/2021 அன்று 14 வயதினை நிறைவு செய்யாதவர்களாக இருப்பின், மாணவர்களது வயது தளர்வு அரசாணையின்படி, சம்பந்தப்பட்ட

மாவட்டக் கல்வி அலுவலர் / முதன்மைக் கல்வி அலுவலரிடம் கண்டிப்பாக வயது தளர்விற்கான (Age relaxation) ஒப்புதல் பெற்றிருக்கவேண்டும். மதிப்பெண் சான்றிதழ் வழங்கப்பட்ட பின்னர், பிறந்த தேதி மாற்றம் கோருவோரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

குறிப்பு: பிறப்புச் சான்றிதழ் இல்லை எனத் தெரிவிக்கும் மாணாக்கரின் பெற்றோரிடமிருந்து மாணவரின் பெயர் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) மற்றும் பிறந்த தேதியினை குறிப்பிட்டு கடிதம் எழுதி வாங்கிய பிறகு, அதன் அடிப்படையில் பெயர் மற்றும் பிறந்த தேதியினை பதிவு செய்ய வேண்டும்.

**3. புகைப்படம்**

சமீபத்தில் எடுக்கப்பட்ட மாணவரது மார்பளவு புகைப்படத்தை (Passport size photo) மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும்.

**4. மாணவரது பெற்றோர் / பாதுகாவலர் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்)** -

மாணவர்களது பெற்றோர் (தாய் மற்றும் தந்தை) / பாதுகாவலரது பெயர்கள் மதிப்பெண் சான்றிதழில் அச்சிட்டு வழங்கப்படும் என்பதால், அவர்களது பெயரை தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தவறில்லாமல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

**5. கைபேசி எண்**

தேர்வு முடிவுகள் மாணவரது பெற்றோரது / பாதுகாவலரது கைபேசி எண்ணுக்கே குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் என்பதால், பதிவேற்றம் செய்யப்படும் கைபேசி எண் சரியானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

## மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வு

1. மாணவரின் பெயர் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) மற்றும் பிறந்த தேதி

மேல்நிலை முதலாமாண்டு பயிலும் மாணவர்களிடமிருந்து பெற்ற பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழின் நகலின் அடிப்படையிலேயே மாணவர்களது பெயர் மற்றும் பிறந்த தேதி ஆகியவற்றைப் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பத்தாம் வகுப்பு தேர்வெழுதிய பின் அரசிதழில் பெயர் மாற்றம் செய்தவர்களுக்கு மட்டும் அரசிதழின் நகலைப் பெற்று அதன் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்து கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

தேர்வர்கள் **01/03/2021** அன்று **15** வயது நிறைவு செய்தவர்களாக இருத்தல் வேண்டும். பத்தாம் வகுப்பு சான்றிதழில் இருப்பது போன்று மாணவரின் பெயர் மற்றும் பிறந்த தேதி இல்லாமல் தவறாக இருப்பது பின்னர் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**2. புகைப்படம்**

சமீபத்தில் எடுக்கப்பட்ட மாணவரது மார்பளவு புகைப்படத்தை (Passport size photo) மட்டுமே பதிவேற்றம் செய்யவேண்டும்.

**3. மாணவரது பெற்றோர் / பாதுகாவலர் பெயர் <u>(ஆங்கிலம் மற்றும் தமிழ்)</u>**

2020–2021 ஆம் கல்வி ஆண்டு முதல் மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழில் மாணவர்களது பெற்றோர் (தாய் மற்றும் தந்தை) / பாதுகாவலரது பெயர் அச்சிட்டு வழங்கப்படும் என்பதால், அவர்களது பெயரை பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறே தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தவறில்லாமல் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

**4. கைபேசி எண்**

தேர்வு முடிவுகள் மாணவரது பெற்றோரது / பாதுகாவலரது கைபேசி எண்ணுக்கே குறுஞ்செய்தியாக அனுப்பப்படும் என்பதால், பதிவேற்றம் செய்யப்படும் கைபேசி எண் சரியானதாக இருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

**5. பாடத்தொகுப்பு**

மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பாடத்தொகுப்பிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடத்தொகுப்பு எண்ணை மட்டுமே குறிப்பிடவேண்டும்.

பள்ளித் தலைமையாசிரியர்கள், மேற்குறிப்பிட்டவாறு தங்கள் பள்ளியில் பயிலும் அனைத்து பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களின் விவரங்களையும் EMIS Portal–ல் சென்று சரிபார்த்து, திருத்தம் செய்யும் பணியினை முடித்த பின்பு, தலைமையாசிரியர்கள் **01.02.2021** முதல் **11.02.2021** வரையிலான நாட்களில் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று, இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படும் வழிமுறைகளை பின்பற்றி,

மாணாக்கரது விவரங்களை சரிபார்த்து கூடுதல் விவரங்களை இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்வது தொடர்பாக பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**<u>பள்ளியினை பதிவு செய்தல்</u>**

1. தலைமையாசிரியர்கள் அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்திற்குச் (www.dge.tn.gov.in) சென்று Online Portal for School and Educational Offices என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

2. கடந்த ஆண்டு அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பள்ளி விவரங்களை பதிவு செய்த பள்ளிகள், பள்ளியின் பெயர் உள்ளிட்ட விவரங்களில் திருத்தம் இருப்பின், திருத்தங்களை மட்டும் மேற்கொள்ளலாம். தற்போது பள்ளித் தலைமையாசிரியராக பணியாற்றுபவரின் கைபேசி எண்ணினை கண்டிப்பாக பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. ஏற்கனவே பள்ளியினை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் பதிவு செய்யாத புதிய பள்ளிகள் மட்டும் School registration என்ற வாசகத்தினை உடளைஉம செய்து தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code (EMIS User ID) மற்றும் Password – ஐ பயன்படுத்தி, தங்களது பள்ளியின் பெயர், பள்ளியின் வகை (Management), மின்னஞ்சல் முகவரி, மாவட்டம் போன்ற விவரங்களை பதிவு செய்யவேண்டும்.

4. School registration-ல் உள்ள பள்ளியின் பெயரே மதிப்பெண் சான்றிதழில் அச்சிடப்படும் என்பதால் பள்ளியின் பெயரை ஆங்கிலத்திலும், தமிழிலும் சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும். பள்ளியின் வகையினையும் (Management) சரியாக குறிப்பிடவேண்டும்.

**<u>பெயர்ப் பட்டியல் தயாரித்தல்</u>**

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டில் பயிலும் மாணவர்களது விவரங்களை பதிவு செய்ய SSLC Examinations **2020–2021** Nominal Roll Registration (OR) HR. Secondary (First Year) Examinations **2020 – 2021**– Nominal Roll Registration என்ற வாசகத்தினை click செய்ய வேண்டும்.

2. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள UDISE Code (EMIS User ID) மற்றும் Password – ஐ பயன்படுத்தி, Pull Data என்ற வாசகத்தை click செய்து, தங்களது பள்ளியில் பயிலும் பத்தாம் வகுப்பு / +1 மாணவர்களது விவரங்களை EMIS–ல்

இருந்து எடுத்து, ஒவ்வொரு மாணாக்கரின் விவரத்தினையும் (Apply என்பதை click செய்து) தனித்தனியே சரிபார்க்கவேண்டும்.

3. மேலும், மாணவரின் பயிற்று மொழி, மாற்றுத் திறனாளித் தேர்வர்களது குறைபாட்டின் தன்மை, விருப்ப மொழிப்பாடம் (பத்தாம் வகுப்பிற்கு மட்டும்) அவர்கள் தேர்வெழுத கோரும் சலுகைகள் போன்ற கூடுதல் விவரங்களை சரியாக பதிவேற்றம் செய்யவேண்டும். சலுகை கோரும் மாற்றுத்திறனாளி மாணாக்கரது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை அல்லது உரிய மருத்துவரிடம் பெற்ற மருத்துவச்சான்றினை Scan செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு தேர்வெழுத வழங்கப்படும் சலுகைகள் குறித்த விவரம் (இணைப்பு–3) இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

4. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதும் அனைத்து மாணவர்களும் பகுதி ஐ–ல் தமிழ் மொழியினை மட்டுமே மொழிப்பாடமாக எழுத அனுமதிக்கப்படுவர்.

5. சிறுபான்மையினர் மொழி பயிலும் மாணவர்களுக்கு 2020 – 2022 வரையிலான கல்வியாண்டுகளுக்கு தமிழ் கட்டாயம் கற்றல் சட்டம் 2006– லிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 2020 – 2021 ஆம் கல்வியாண்டிற்கான பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விற்கு பகுதி ஐ–ல் அவரவர் மொழிப்பாடத்தில் தேர்வெழுத அனுமதி வழங்கப்படுகிறது.

6. தமிழ் மற்றும் ஆங்கிலம் அல்லாத பிற மொழிகளை தாய்மொழியாகக் கொண்ட பத்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பின்வரும் மொழிப்பாடத்தை விருப்ப மொழிப்பாடமாக பகுதி IV–ல் எழுத அனுமதிக்கப்படுவர். (Telugu / Malayalam / Kannada / Urdu / Hindi / Sanskrit / Arabic / French / Gujarathi) பகுதி IV-ல் பெறப்படும் மதிப்பெண்கள் தேர்வின் தேர்ச்சிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

7. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் BC/BCM பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களது (தேர்வுக்கட்டண விலக்கு கோருபவர்கள் மட்டும்) பெற்றோரின் ஆண்டு வருமானத்தினை (ரூ.2,00,000/– க்கு குறைவாக உள்ளதா என்பதை) தேர்வு செய்யவேண்டும்.

8. மாணவர்களது அனைத்து விவரங்களையும் பதிவேற்றம் செய்த பின்னர், உறுதிமொழிப்படிவம் (Declaration form) மற்றும் மாணவரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை பதிவிறக்கம் செய்யவேண்டும்.

## <u>உறுதி மொழிப் படிவத்தில் மாணவர்களது / மாணவர்களின் பெற்றோர்களது கையொப்பம் பெறுதல் மற்றும் பெயர்பட்டியலில் திருத்தம் மேற்கொள்ளுதல்</u>

1. உறுதிமொழி படிவத்தினை பதிவிறக்கம் செய்த பின்பு, 02.02.2021 முதல் 11.02.2021 வரையிலான நாட்களில் மாணவர்களை / மாணவர்களின் பெற்றோர்களை பள்ளிக்கு வரவழைத்து உறுதிமொழிப் படிவத்தில் பூர்த்தி செய்துள்ள மாணவரின் பெயர், பிறந்த தேதி, புகைப்படம். மாணவரது பெற்றோரின் பெயர் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் சரிபார்க்கச் செய்து, அப்படிவத்தில் பள்ளி மாணவரின் கையெழுத்தினையும், பெற்றோரின் கையெழுத்தினையும் பெறுதல் வேண்டும். அச்சமயம் தேர்வுக் கட்டண விலக்கு பெற்ற மாணவர்கள் தவிர மற்ற மாணவர்களிடம் தேர்வுக் கட்டணத்தினை பெற்றுக் கொள்ளவேண்டும். மாணவர்கள் / பெற்றோர்கள் பள்ளிக்கு வருகை தரும் நாட்களில், பள்ளித் தலைமையாசிரியர் பார்வையில் காணும் அரசாணையில் வழங்கப்பட்டுள்ள பின்வரும் நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

I. உறுதி மொழிப் படிவத்தில் கையொப்பம் பெற / தேர்வுக் கட்டணம் பெற நீண்ட வரிசையில் மாணவர்கள் / பெற்றோர்கள் காத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு, மாணவர்கள் பள்ளிக்கு வருகை தர வேண்டிய நேரம் குறித்து முன்னரே மாணவர்களுக்கு தெரிவித்திட வேண்டும். ஒரு மணி நேரத்திற்கு 20 மாணவர்களுக்கு மிகாமல் பள்ளிக்கு வருகை புரியுமாறு திட்டமிடுதல் வேண்டும்.

II. தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் (Containment zone) உள்ள அல்லது தனிமைப்படுத்தப்பட்டுள்ள (Quarantine) மாணவர்கள் / பெற்றோர்கள் தனிமைப்படுத்தலுக்கான காலம் முடிவடைந்து இயல்பு நிலைக்கு திரும்பிய பின், உறுதிமொழிப்படிவத்தில் கையொப்பம் இட / தேர்வுக்கட்டணம் செலுத்த பள்ளிக்கு வருகை புரியுமாறு தெரிவித்தல் வேண்டும்.

III. மாணவர்கள் வரிசையில் நிற்கும்பொழுது சமூக இடைவெளியினை கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக தரையில் போதிய இடைவெளி விட்டு குறியீடுகள் உருவாக்கிட வேண்டும்.

IV. பள்ளிக்கு வருகை தரும் மாணவர்கள் / பெற்றோர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

V. இப்பணி நடைபெறும் நாட்களில் பள்ளி நுழைவு வாயிலில் கூட்டம் கூடுவதை தவிர்க்கும் பொருட்டு சமூக இடைவெளிக்கான விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடித்தல் வேண்டும்.

VI. இப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் / ஆசிரியர்கள் கட்டாயம் முகக்கவசம் மற்றும் கையுறை அணிந்திருத்தல் வேண்டும்.

VII. மாணவர்கள் / பெற்றோர்கள் சமூக இடைவெளியினைப் பின்பற்றுவதற்கு ஏதுவாக பள்ளித் தலைமை ஆசிரியர் இரண்டு வகுப்பறைகளை காத்திருப்பு அறைகளாக (Waiting rooms) அமைத்தல் வேண்டும். மாணவர்கள்/ பெற்றோர்கள் நீண்ட நேரம் காத்திருத்தலுக்கு உள்ளாக்கக்கூடாது.

VIII. ஒவ்வொரு நாளும் இப்பணி ஆரம்பிப்பதற்கு முன்பு பள்ளி வளாகம், மேசை, நாற்காலி, கதவு, ஜன்னல் ஆகியவற்றில் கிருமிநாசினி தெளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

IX. பள்ளி வளாகத்தில் கை கழுவுவதற்கு சோப்பு மற்றும் தண்ணீர் வசதி ஏற்பாடு செய்தல் வேண்டும். அதற்கேற்ப பள்ளியின் நுழைவாயில் மற்றும் வெளியேறும் வழி ஆகியவற்றில் சோப்பு மற்றும் கை கழுவுவதற்கு தகுந்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.

X. இப்பணியில் ஈடுபடும் ஆசிரியர்கள், பணியாளர்கள், அனைவரையும் அவர்களது கைகளை சோப்பு / Hand Sanitizers கொண்டு சுத்தம் செய்த பின்னரே பள்ளி வளாகத்திற்குள் அனுமதிக்க வேண்டும்.

XI. மாணவர்களிடம் உறுதி மொழிப் படிவத்தினைப் பெற்ற பின்பு சம்பந்தப்பட்ட பணியாளர் கைகளை கிருமிநீக்கம் செய்தல் வேண்டும்.

XII. ஆசிரியர்கள் / பணியாளர்கள்/ மாணவர்கள் / மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்திருப்பதை பள்ளித் தலைமை ஆசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

XIII. ஆசிரியர்கள் / பணியாளர்கள் / மாணவர்கள் அனைவரும் தேவையின்றி பள்ளி வளாகத்திற்குள் கூட்டம் கூடுதல் கூடாது என அறிவுறுத்துதல் வேண்டும்.

XIV. மேலும், இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படும் அரசாணை (நிலை) எண்.58, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (D.M-IV) துறை, நாள்.22.07.2020–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையான வழிகாட்டு நடைமுறைகள் அனைத்தும் பள்ளிவளாகத்தில் கண்டிப்பாக பின்பற்றப்படுதல் வேண்டும்.

2. தேர்வெழுத சலுகை கோரும் மாற்றுத் திறனாளி மாணவர்கள் அல்லது மாற்றுத் திறனாளி மாணவர்கள் / மாணவர்களது பெற்றோர்கள் பள்ளிக்கு வருகை தரும்பொழுது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தினை (இணைப்பு–2 ) வழங்கி, மாணவர்கள் / பெற்றோர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பள்ளித் தலைமையாசிரியர் பெற்றுக் கொள்ள வேண்டும். (மருத்துவ சான்றிதழில் நோயின் தன்மை மற்றும் மாணவருக்கு வழங்க வேண்டிய சலுகை பற்றிய விவரம் ஆகியவை கண்டிப்பாக இடம் பெற்றிருக்க வேண்டும்). மாற்றுத் திறனாளி மாணவர்கள் விண்ணப்பத்தில் கோரியுள்ள சலுகைகளை மட்டுமே இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு மாணவரின் உறுதிமொழிப் படிவத்திலும், சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியரும், பள்ளித் தலைமையாசிரியரும் அனைத்து விவரங்களும் சரியாக உள்ளதா என்பதனை ஒருமுறைக்கு இருமுறை உறுதி செய்து கொண்டு உறுதிமொழிப் படிவத்தில் கையொப்பமிட வேண்டும்.

4. அனைத்து மாணவர்களது உறுதிமொழிப் படிவங்களிலும் மேற்குறிப்பிட்டவாறு அனைவரது கையொப்பங்களையும் பெற்ற பிறகு, மாணவர்களின் விவரங்களில் ஏதேனும் திருத்தம் இருப்பின், அத்திருத்தங்களை 11.02.2021–க்குள் அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

5. தமிழில் உள்ள மாணவர்களின் பெயர், பெற்றோர்களின் பெயர் மற்றும் பள்ளியின் பெயரை திருத்தம் செய்ய வேண்டுமெனில், ஏற்கனவே உள்ள பெயரை முழுவதும் நீக்கம் (Delete) செய்த பின்பு, அரசுத் தேர்வுகள் இணையதளத்தில் உள்ள Key board– ஐ தேர்வு செய்து, ஒவ்வொரு எழுத்தாக click செய்யவேண்டும்.

6. பெயர்ப்பட்டியலின் அடிப்படையிலேயே மதிப்பெண் சான்றிதழ் அச்சிடப்படும் என்பதால், இப்பணியினை தலைமையாசிரியர் தமது நேரடி கவனத்தில் மிகுந்த பொறுப்புடனும், சிரத்தையுடனும் மேற்கொள்ள வேண்டும்.

7. பதிவேற்றம் செய்யப்பட்ட மாணாக்கரின் விவரங்களில் தவறுகள் ஏதும் ஏற்படின் சம்பந்தப்பட்ட வகுப்பாசிரியர் மற்றும் பள்ளித் தலைமையாசிரியரே முழுப் பொறுப்பேற்க நேரிடும் என்பதுடன், அவர்கள் மீது துறை நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

**குறிப்பு.** பள்ளித் தலைமையாசிரியர்கள், மேற்குறிப்பிட்டவாறு மாற்றுத் திறனாளி மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம், மாற்றுத் திறனாளிக்கான அடையாள அட்டையின் நகல் அல்லது மருத்துவக் குழுவின் பரிந்துரைக் கடிதம் ஆகியவற்றை பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்கள் என தனித்தனியாகப் பிரித்து, பத்தாம் வகுப்பு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலகத்திலும், மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களின் விண்ணப்பக் கட்டுகளை **வேலூர் முதன்மைக் கல்வி அலுவலகத்திலும் 19.02.2021–க்குள் ஒப்படைக்கவேண்டும்.**

## <u>தேர்வு க் கட்டணம் செலுத்துதல்</u>

மேற்குறிப்பிட்டவாறு தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பயிலும் அனைத்து மாணவர்களது விவரங்களையும் பதிவேற்றம் செய்தபின்னர், தேர்வுக்கட்டணம் செலுத்தவேண்டிய பள்ளி மாணாக்கரிடமிருந்து மட்டும் (தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களைத் தவிர்த்து) தேர்வுக்கட்டணத் தொகையினை பெற்று, இத்துடன் இணைத்தனுப்பப்படும் வழிமுறைகளைப் பின்பற்றி இதே இணையதளத்திலுள்ள Payment option-I பயன்படுத்தி (Credit Card / Debit Card / Net Banking) ஆன்லைன் வாயிலாக **11–02–2021**க்குள் தேர்வுக்கட்டணத்தினை செலுத்தவேண்டும்.

## பத்தாம் வகுப்பு பொதுத்தேர்விற்கான கட்டணம்

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்கள் | ரூ.100/– | ரூ.10/– | ரூ.5/– | ரூ.115/– |

## மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான கட்டணம்

| வ.எண் | மாணவர் வகை | தேர்வுக் கட்டணம் | மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் | சேவைக் கட்டணம் | மொத்தம் (ஒரு மாணவருக்கு) |
|---|---|---|---|---|---|
| 1 | செய்முறை கொண்ட பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.200/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.225/– |
| 2 | செய்முறை இல்லாத பாடங்களடங்கிய பாடத் தொகுப்பில் பயில்வோர் | ரூ.150/– | ரூ.20/– | ரூ.5/– | ரூ.175/– |

<u>தேர்வுக் கட்டண விலக்கிற்கு தகுதியானோர்:</u>

I. தமிழை பயிற்று மொழியாகக் கொண்டு (Tamil Medium) தேர்வெழுதும் அனைத்து பள்ளி மாணவர்களுக்கும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

II. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழி தவிர இதர பயிற்று மொழிகளில் (Other than Tamil Medium) பயிலும் பின்வரும் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

அ) SC/SCA/ST மற்றும் SC Converts (SS) — பெற்றோருக்கான வருமானத்திற்கு உச்சவரம்பு ஏதும் இல்லை.

ஆ) MBC/DC

இ) BC/BCM – பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு இலட்சத்திற்கு) மிகாமல் இருப்பவர்களுக்கு மட்டும்

III. அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் கண்பார்வையற்றோர் மற்றும் கேட்கும் / பேசும் திறனற்றோர்.

**<u>மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ–இந்தியப் பள்ளிகள்:</u>**

மெட்ரிகுலேஷன் மற்றும் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகளில் பயின்று பத்தாம் வகுப்பு / பதினோராம் வகுப்பு பொதுத் தேர்வெழுதும் மாணவர்கள் தேர்வுக் கட்டண விலக்கு பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்.

இணையதளம் மூலம் மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வு கட்டணம் செலுத்துதல் தொடர்பாக பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்த காணொளியினை அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தில் காணலாம்.

இணையதளம் வாயிலாக மாணவர்களின் விவரங்களை பதிவேற்றம் செய்தல் மற்றும் தேர்வுக்கட்டணம் செலுத்துதல் தொடர்பான சந்தேகங்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் (இணைப்பு–4) உள்ள வேலூர் மாவட்டத்தின் (இப்பணி தொடர்பான) ஒருங்கிணைப்பாளரை (Co-ordinator) தொடர்பு கொள்ளலாம்.

<u>இணைப்பு</u> :

1. பார்வையில் காணும் அரசாணையின் நகல்
2. தேர்வெழுத சலுகை கோரும் படிவம்
3. மாற்றுத் திறனாளித் தேர்வர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்
4. ஒருங்கிணைப்பாளர்கள் பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும்
மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. அரசுத் தேர்வுகள் மாவட்ட உதவி இயக்குநர் வேலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பலாகிறது.